
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1268

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

120

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# 'நீட்' எதிர்ப்புப் போராட்டமும், கொல்லைப்புற கொள்கைத் திணிப்பும்!

***'நீட்' தேர்வுக்கு எதிராகத் தலைமைச் செயலகத்தின் முன்பு, குரல்கொடுத்த பாடகர், 'தெருக்குரல்' அறிவு என்பவரை போலீஸார் அங்கிருந்து இழுத்துச்சென்று, பின்னர் அவரை முதலமைச்சர் விஜய்யை சந்திக்க ஏற்பாடு செய்தார்களாமே?***

விஜய் நடித்த படங்களில்கூட திரைக்கதை இந்தளவுக்கு இருந்திருக்குமா என்று தெரியாது. சந்தித்தது முதமைச்சரை அல்ல, முதல் போட்ட அமைச்சரான ஆதவ் அர்ஜுனாவை என 'தெருக்குரல்' அறிவு விளக்கியதும் அந்த 'ரீல் அந்துபோச்சு'.

'நீட்' தேர்வு மோசடிகளுக்கு எதிராக ஆயிரக்கணக்கான இளைஞர்களும் மாணவர்களும் டெல்லியில் திரண்டார்கள். போராடினார்கள். தி.மு.க. சார்பில், துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. டெல்லியில் மாணவர்களைச் சந்தித்து, கழகத்தின் ஆதரவைத் தெரிவித்தார். இளைஞர்களும் மாணவர்களும் நாடாளுமன்றம் நோக்கி பேரணி செல்ல முயன்றார்கள். அவர்கள் மீது, பா.ஜ.க. அரசின் போலீஸும் துணை ராணுவமும் கொடூரத் தாக்குதல் நடத்தியது.

தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பா.ஜ.க. அரசின் கொடூரத் தாக்குதலுக்கு எதிரான தனது கண்டனத்தைப் பதிவுசெய்து, 'கரப்பான்பூச்சி ஜனதா' கட்சியினர் முன்னெடுத்த 'நீட்' எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவைத் தெரிவித்தார். இந்தியாவின் ஒட்டுமொத்த கவனமும் டெல்லியில் இருந்த நிலையில், த.வெ.க. அந்தப் பக்கமே திரும்பவில்லை.

மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைத்து, அவர்களின் உயிரைக் குடிக்கும் 'நீட்' தேர்வை ரத்துசெய்ய வேண்டும் என்பதும், இந்தியா முழுவதும் ரத்துசெய்ய முடியாவிட்டால், தமிழ்நாட்டிற்கு இந்தத் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதும் தி.மு.க.வின் உறுதியான நிலைப்பாடு. த.வெ.க.வுக்கும் விஜய்க்கும் 'நீட்' தேர்வில் நிலையான நிலைப்பாடு உண்டா?

எல்லோரும் டாக்டருக்குத்தான் படிக்க வேண்டுமா என்று த.வெ.க. கட்சித் தலைவராகக் கேட்டவர்தான் விஜய். அதாவது, டாக்டருக்குப் படிக்க 'நீட்' தேர்வு தடையாக இருக்கிறது என்றால், அந்தப் பக்கம் போகாமல் வேறு படிப்பு படிக்க வேண்டியதுதானே என்பது அவரது நிலைப்பாடு. நீட்டை ஒழிக்க வேண்டும் என்பதல்ல.

இப்படியான நிலைமையில்தான், தங்கள் கட்சியின் 'கொள்கைப் பாடலை எழுதிய 'தெருக்குரல்' அறிவு, சட்டமன்றம் முன்பு போராட்டம் நடத்தச் சென்றபோது, அவரை அழைத்து முதலமைச்சர் விஜய் பேசினார் என்று 'ரீல்ஸ்' விட்டனர். ஆனால், சந்தித்தது என்னவோ நிழல் முதலமைச்சராக வலம் வரும் முதல் போட்ட அமைச்சர்தான். ஆனால், 'நீட்' தேர்வு மோசடிகள் மற்றும் தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக, சென்னையில் போராடிய மாணவர்களை அடித்து இழுத்து கைதுசெய்தது, த.வெ.க. அரசின் காவல் துறை.

'தெருக்குரல்' அறிவு எழுதிய கொள்கைப் பாடலில் இருந்து அறிவை வளர்த்துக் கொண்டதால்தான், டெல்லியில் 'நிதி ஆயோக்' கூட்டத்தில் 'நீட்' தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டாரா ஒரிஜினல் முதலமைச்சர் விஜய்?

அந்த நீட் தேர்வுக்கு எதிராகத்தான் டெல்லியில் 25 நாட்களாக மாணவர்கள் போராடுகிறார்கள். அதுவும், பா.ஜ.க.வை எதிர்த்துப் போராடுகிறார்கள். பா.ஜ.க.வைத் தனது கொள்கை எதிரி என்று சொன்ன விஜய், இதுவரை பா.ஜ.க.வுக்கு எதிராக ஏதாவது பேசியிருக்கிறாரா? சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தியிருக்கிறது, ஒன்றிய பா.ஜ.க. அரசு. "மும்மொழிப் பாடத்திட்டம்' கொண்ட 'பி.எம்.ஸ்ரீ' பள்ளிகளுக்குத் தமிழ்நாடு அனுமதி அளித்தால்தான் ஒன்றிய அரசு தர வேண்டிய கல்வி நிதியைத் தருவோம்" என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் ஒன்றிய கல்வி அமைச்சர். இதற்கு விஜய் தலைமையிலான த.வெ.க. அரசின் பதில் என்ன? ஆயிரத்திற்கும் அதிகமான சி.பி. எஸ்.இ. பள்ளிகளைத் தமிழ்நாட்டில் புதிதாக அனுமதித்திருக்கிறது, த.வெ.க. அரசு.

கொள்கை எதிரியை எதிர்த்து, ஒரு வார்த்தைகூட பேச மாட்டேன் என்பதுதான் விஜய் கட்சியின் கொள்கையோ?

**...வினா தொடரும்.**

## நாடக மேடையில், ஒரு திரைப்படம்!

'ஜனநாயகன்' திரைப்படத்தைத் தேர்தலுக்கு முன்பு ஏன் அனுமதிக்கவில்லை? அப்போது வெளிவந்திருந்தால், யாருக்கு பாதிப்பு? தற்போது வெளி வருவதால் யாருக்கு லாபம்? என முகநூலில் கருத்துகளைப் பகிர்ந்துள்ள ஆவணப்பட இயக்குநர் பி.ஆர்.அமுதன், 'இதெல்லாம் ஒரு நாடகம்' எனக் குறிப்பிடுகிறார். அவரது பதிவிலிருந்து...

"நடிகர் ஆட்சியில் அமர்வதற்கும் அரசாங்கத்தை நடத்துவதற்கும் மிகுந்த சிரமப்படுகிறார். ஒவ்வொரு நாளும் பிரச்சினை.

'பாலியல் வன்முறை', 'ஆணவக்கொலைகள்', 'காவல் நிலைய மரணங்கள்', 'ஊழல்', 'பொய்ச் செய்திகள்', 'சமூக ஊடகங்களை வழக்குகளைப் போட்டு முடக்குதல்', 'விமர்சனம் செய்வோரைத் தொடர்ந்து கைதுசெய்தல்', 'போதை மருந்துக் கலாச்சாரம்', 'சட்டமன்ற உறுப்பினர்களைத் திருடுதல்', 'கட்சிகளை உடைத்தல்', 'பொய் வழக்குகள் போடுதல்', 'போலிச்செய்திகளைப் பரப்புதல்', 'ஒன்றிய அரசின் திட்டங்களை ஏற்றுக்கொள்ளுதல்', 'தற்குறித்தனமான செயல்பாடுகள்' எனக் கால் வைக்கிற இடமெல்லாம் கண்ணிவெடியாக இருந்தால், கோடீஸ்வரர், ராஜா வீட்டுக் கன்னுக்குட்டி, எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டு வருபவர் என்னதான் செய்வார்?

எல்லோரும் சேர்ந்து தி.மு.க.வை முடக்கினாலும், தி.மு.க. குடைச்சலைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறது.

இப்போது, 'ஹீரோ விஜய்' என்றும் 'தி.மு.க. வில்லன்' என்றும், கட்டமைத்துவிட்டார்கள்.

ஆனால், வில்லன் கை ஓங்கியபடியே இருக்கிறது. ரசிகர்கள் சோர்ந்துபோய் உள்ளனர்.

'மீண்டும் ஒரு வெடிப்பு', நடிகருக்குத் தேவைப்படுகிறது. தேர்தல் இப்போதைக்கு சாத்தியமில்லை. திரைப்படத்தை வெளியிட்டுப் பார்ப்போம் என்று இறங்கியிருக்கிறார்கள்' என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்

### தலைவருடன் முதல் புகைப்படம்!



1996-ஆம் ஆண்டு, சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியின் வேட்பாளராகக் களம் கண்ட நமது தலைவர் தளபதி அவர்களுக்கு, அன்றைய 111-வது வட்டத்தில் என்னுடைய 18 வயதில், முதல் வாக்கினைப் பதிவுசெய்து, தி.மு.க. என்னும் சுயமரியாதைக் குடும்பத்தில் என்னை இணைத்துக்கொண்டேன். தலைவர், தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், ஆயிரம்விளக்கு பகுதியில் நடந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் வெற்றிப் பதக்கம் மற்றும் வெற்றிச் சான்றிதழ்களை வழங்க வருகைதந்தார். அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படம். 30 ஆண்டுகளுக்கு முன்னர் தலைவருடன் எடுத்துக்கொண்ட முதல் புகைப்படம் என்பதால், இந்தப் படம் மனதுக்கு நெருக்கமானது. தலைவரைக் கண்ட முதல் நாள், நீங்காத நினைவாக உள்ளது.



கே.சங்கர்

**- கே.சங்கர், 115-வது வட்டத் துணைச் செயலாளர், சேப்பாக்கம் பகுதி, சென்னை மேற்கு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## வலையோசை



**Arul Ezhilan**

அறிவு ஏன் தலைமைச் செயலகம் வந்தார்? கோஷமிட்டார், பின்னர் உள்ளே போனார். யாருக்குப் பாடல் எழுதினாரோ, அந்த முதல்வரைச் சந்தித்தார். பின்னர் ஆதவ் அர்ஜுனா, 'நம்ம தம்பிதான்' என வழியனுப்ப, காரில் ஏறிச் சென்றார். இதில் என்ன இருக்கிறது? வெளிப்படைத் தன்மையற்ற இந்த அணுகுமுறை. யாராவது இதை விளக்குங்களேன்?



**Kavin Malar**


இல்ல. புரியல.

'நான் முதல்வன்' பெயர் மாற்றம், 'முதல்வர் படைப்பகம்' பெயர் மாற்றம். இப்போது, 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' பெயர் மாற்றம். 'அம்மா உணவகம்' பெயர் அப்படியே தொடர்கிறது. 'அம்மா' என்பது, ஜெயலலிதாவைக் குறிக்கும் பெயர். அது தொடர்வது பிரச்சினை இல்லை, த.வெ.க. அரசுக்கு. ஆனால், முதல்வர் எனும் பெயர்மீது பிரச்சினை என்றால் என்ன பொருள்? 'முதல்வர்' என்றால், மு.க.ஸ்டாலினைக் குறிக்கும் என நினைக்கிறாரா விஜய்? அல்லது தானே இப்போது முதல்வர் என்பதை, அவரே ஒப்புக்கொள்ளவில்லையா?



**R Muthu Kumar**

'மத்திய அரசின் மசோதாவை தி.மு.க. ஆதரிக்கக் கூடாது' - ப.சிதம்பரம். 'பா.ஜ.க. எதிர்ப்பில், தி.மு.க. உறுதியாக இருக்க வேண்டும்' - தொல்.திருமாவளவன். 'களம் செல்லும் வீரனுக்குத் தெரியும், எந்தக் கையில் வாளேந்துவது, எந்தக் கையில் கேடயமேந்துவது என்று!' - கலைஞர்.



**Chinthan Ep**

"சாலை என்பது, போராடுவதற்கான இடமல்ல. அது போராடும் முறையல்ல. அதை நாங்க ஏற்க மாட்டோம்" -கல்வி அமைச்சர் ராஜ்மோகன்.

ஆமா, போராடுவதற்கான சரியான இடம் பனையூர் பங்களாதான். அதற்குள் ஒளிந்துகொண்டு, எதற்கும் வெளியே வராமல், எப்போதும் மௌனமாக இருப்பதுதான் போராடும் வழி. போராட்டங்களின் வரலாறு தெரியாத கூட்டமெல்லாம் ஆட்சிக்கு வந்து, கடுப்பேத்துறாய்ங்களே..!







## படம் சொல்லும் செய்தி

## நல்வரவு

### சென்னை மாநகராட்சியில் சீர்திருத்தங்கள்!

1959-ஆம் ஆண்டு, சென்னை மாநகர மன்றத் தேர்தலில் வெற்றிபெற்று, மேயர் - துணை மேயர் ஆகிய இரண்டு பொறுப்புகளையும் தி.மு.கழகம் கைப்பற்றியது. அதன்மூலம் மாநகராட்சி மன்றத் துணைக்குழு யாவற்றையும் நிர்வகிக்கும் பொறுப்பு, தி.மு.க. உறுப்பினர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு, அவை நன்முறையில் நடைபெற்று வந்தன. மற்றும் பல புரட்சிகரமான சீர்திருத்தங்களை கழகம் மேற்கொண்டு, மக்களின் ஆதரவைப் பெற்றது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900